**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 22.01.2026.**

| | |
|---|---|
| **Name : சீனிவாசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். மாதைய்யன் என்பவரை தெரியும். அவர் M.K.M ஸ்டோர்ஸ் என்ற பெயரில் ஸ்டேஷனரி கடை நடத்தி வருகிறார். எதிரியை எனக்கு தெரியும். ஊரில் அவர் அடிக்கடி பிரச்சனை செய்வார். கடந்த 25.08.2025ம் தேதி இரவு 9 மணிக்கு நான் எப்போதும் போல் மாதைய்யன் கடைக்கு சென்ற போது எதிரி பிரச்சனை செய்து கொண்டிருந்தார். அப்போது தான் நான் சென்றேன். அப்போது மாதைய்யன், கண்ணன், நடேஷ் மற்றும் இரு நபர்கள் இருந்தார்கள்.

2) ஏன் பிரச்சனை செய்கிறாய் என்று கேட்ட போது எதிரி கத்தியை எடுத்து வந்து குத்த போகிறேன் என்று சொல்லி கடையிலிருந்த பாட்டிலை தூக்கி கீழே போட்டு உடைத்தார். எதிரி அவனுடன் வந்தவர்கள் அழைத்து சென்ற பிறகு 1 /2 மணி நேரம் கழித்து வந்து திரும்ப வந்து மாதைய்யனை பார்த்து குத்தாமல் விடமாட்டேன் என்று சொன்னார். மாதைய்யனை பார்த்து எதிரி தெவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்.

3) எதிரி கடலை உருண்டை கேட்டு அதிக விலை சொன்னதாக சொல்லி பிரச்சனை செய்தார். எதிரியை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். பிறகு காவல் நிலையம் சென்று மாதைய்யன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்கு விசாரித்தனர் என்றால் இரண்டு நாட்களுக்கு பிறகு 11 மணியளவில் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அங்கு வைத்து என்னை விசாரித்தார்கள். நான் புகையிலை வியாபாரம் செய்கிறேன். என் கடைக்கும் மாதைய்யன் கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 அடி தூரமிருக்கும். என் கடையிலிருந்து பார்த்தால் மாதைய்யன் கடை தெரியாது என்றால் ஆமாம். மாதைய்யன் கடையிலிருந்து சத்தம் போட்டால் என் கடைக்கு கேட்காது என்றால் சரிதான்.

5) போலீசார் விசாரித்த போது கடைகளில் உள்ள பொருட்களை எடுத்து வைத்திருந்தேன் சத்தம் கேட்டு சென்றேன் என்று சொன்னேனா என்றால் இல்லை. நான் சென்ற போது சத்தம் போட்டு முடித்தனரா என்றால் முடித்தனர். எதிரியுடன் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 2 பேர் இருந்தார்கள். ஒரு பெண் வந்தவுடன் எதிரி சென்றுவிட்டார்.

6) மாதைய்யன் எனக்கு அக்கா மகன். சம்பவம் நடந்தவுடனே போலீசார் வந்தார்களா என்றால் இல்லை. அ.சா.1 போலீசாருக்கு தகவல் கொடுத்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் நான் இருக்கும் வரை போலீசார் அங்கு வரவில்லை. நான் கோவிலுக்கு செல்ல சென்றுவிட்டேன். தற்போது முதல் விசாரணையில் சொன்னவற்றை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் அ.சா.1 புகார் அளித்ததாக தெரிந்து கொண்டேன்.

7) அ.சா.1 என் அக்கா மகன் என்பதற்காக நான் அவர் அளித்த புகாருக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் எதிரி சம்பவயிடத்தில் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. உடைந்த கண்ணாடி பாட்டிலை என்ன செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நான் கிளம்பிவிட்டதால் எனக்கு தெரியவில்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா. 6 Date : 22.01.2026.**

| | |
|---|---|
| **Name : அர்த்தனாரி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து தறி ஓட்டி வேலை செய்கிறேன். மாதையன் என்பவரை தெரியும். அ.சா.1 என் மைத்துனர். அவர் M.K.M ஸ்டோர்ஸ் என்ற பெயரில் பேன்சி கடை நடத்தி வருகிறார். அவருடைய மகன் கண்ணன் என்பவரையும் தெரியும். எதிரியை எனக்கு தெரியும். கடந்த 25.08.2024 ம் தேதி இரவு 9.30 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது எதிரி மாதையன் கடைக்கு வந்து பிரச்சனை செய்ததாக தெரிந்து கொண்டேன்.

2) அ.சா.2 யை அடிக்க சென்றதாக தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக மாதையன் புகார் கொடுத்தார். கடந்த 27.08.2024 ம் தேதி மதியம் 12 மணிக்கு ஜலகண்டாபுரம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அ திலுள்ள விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் உள்ள 1 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

3) என்னிடம் எத்தனை கையொப்பம் பெற்றார்கள் என்றால் 1 கையொப்பம் பெற்றார்கள். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். அ.சா.1 என் உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம்

செய்துவிட்டு தற்போது சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**